செ.வெ.எண்55/2017 நாள்:19.09.2017

**சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனுடைய நபர்களுக்கு பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு ஏற்படுத்திடும் வகையில் தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற விண்ணப்பிக்கலாம்**

**சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனுடைய நபர்களுக்கு பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு ஏற்படுத்திடும் வகையில் தமிழ்நாடு தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி நிறுவனத்தில் பதிவு பெற்ற நிறுவனங்கள் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் திறன் மேம்பாட்டு பயிற்சி 50 மாற்றுத்திறனுடைய நபர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

எனவே, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 18 வயது முதல் உள்ள மாற்றுத்திறனுடைய நபர்கள் மேனிலைப் வகுப்பு அல்லது அதற்கு மேல் படித்த கை, கால் இயக்க குறைபாடுடைய 40 மாற்றுத்திறனுடைய நபர்களுக்கும், 10 பார்வைதிறன் குறைபாடுடைய மாற்றுத்திறனுடைய நபர்களுக்கு 200 மணிநேரம் கீழ்காணும் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

- ஆங்கில மொழி கல்வி,
- கணினி பயிற்சி.

பயிற்சி தேவைப்படும் மாற்றுத்திறனுடைய நபர்கள் புகைப்படத்துடன் தாங்களின் முழு விவரங்களுடன், சிவகங்கை மாவட்டத்தை சார்ந்த தகுதியுடைய மாற்றுத்திறனுடைய நபர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் உரிய சான்றுகளுடன் 22-09-2017க்குள் விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

சிவகங்கை.